| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **153/2022** |
| **DATE** | : | **24.07.2026** |
| **பெயர்** | : | **ஞானசம்மந்தம்** |
| **தந்தை பெயர்** | : | **கன்னியப்பன்** |

**பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பக்கத்தில் உள்ள பிரதிவாதியின் சொத்தை பிளாட் போட்டு விற்றால் எனது நிலத்தின் விவசாயம் பாதிக்கும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து மொத்தம் 6 பேர். எனது உடன் பிறந்தவர்களுக்கும் எனது சொத்தின் பக்கத்தில் சொத்து உள்ளது. எனது சொத்திற்கு வடக்கில் எனது தம்பியிடம் இருந்து 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்து உள்ளது, தெற்கில் எனது நிலம், மேற்கில் எனது தம்பி பொன்னுரங்கம் மற்றும் எனது மனைவி தங்கம்மாளின் நிலம் உள்ளது, கிழக்கில் தெரு மற்றும் வீடு உள்ளது.

2. 1ம் பிரதிவாதி சர்வே எண் 601/1A சொத்தை வாங்கியுள்ளார். அந்த சொத்தின் விஸ்தீரனம் 53 செண்ட். 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு வழி குளக்கரை பக்கத்தில் உள்ளது. நான் தற்போது கம்மாளத் தெரு (எ) பிராமினர் தெரு, களக்காட்டுரில் வசித்து வருகிறேன். 1ம் பிரதிவாதி எங்கு வசித்து வருகிறார் என்று நான் பார்த்தது கிடையாது, 1ம் பிரதிவாதியை எனக்கு அடையாளம் தெரியாது. 1ம் பிரதிவாதி எனது தம்பியிடம் இருந்து சொத்து வாங்கி சுமார் 8 வருடங்கள் இருக்கும். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதிக்கு எனது தம்பி மகள் பத்மாவதி 06.02.2014 அன்று கிரையம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2014ல் இருந்து தற்போது வரை 12 வருட காலகட்டத்தில் 1ம் பிரதிவாதி சொத்திற்கு வந்தது கிடையாது, அவரை நான் பார்த்தது இல்லை. 1ம் பிரதிவாதியின் நிலத்தில் வாங்கியதில் இருந்து தற்போது வரை விவசாயம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எனது விவசாய நிலத்தின் சர்வே எண் 601/2. அதன் விஸ்தீரனம் 98 செண்ட். எனது பிராதில் குறிப்பிட்டுள்ள கால்வாய் எங்கு தொடங்கி எங்கு முடிகிறது என்றால் எனதுமனைவி தங்கம்மாள் நிலத்தில் இருந்து பொண்ணுரங்கம் நிலத்தில் வந்து எனது

நிலத்திற்கு வந்து எனது நிலத்தில் இருந்து 1ம் பிரதிவாதி நிலத்திற்கு செல்லும். நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ–12 கிராம வரைபடம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் சர்வே எண் 601/1A எங்குள்ளது என்றால் கிராம வரைபடத்தில் சர்வே எண் 601 மொத்தமாக காட்டப்பட்டுள்ளது, கால்வாயும் அதில் உள்ளது.

4. சர்வே எண் 601/1A கால்வாய்க்கு தெண்ணண்டை பக்கம் உள்ளது. அந்த கால்வாய் அனைவருக்கும் பொதுவான கால்வாய். மேற்படி கால்வாய் தாங்கலில் தொடங்கி களக்காட்டூர் கிராமத்தின் வழியாக பாய்ந்து சர்வே எண் 601ல் முடிகிறது. சர்வே எண் 602/2 ற்கு பக்கத்தில் எனக்கு கால்வாய் உள்ளதால் எனக்கு நீர்ப்பாசனத்திற்கு எந்த பிரச்சனையும் கிடையாது என்று சொன்னால் சரிதான்.

5. சர்வே எண் 601/1A என்பது உட்பிரிவு செய்யப்பட்டதால் முன்பிருக்கும் 601/1Bக்கு நீர்பாசனத்திற்கு பிறகு அவர்கள் வழிவிட்டால் தான் 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் என்று சொன்னால் சரிதான், ஆனால் வழி விடுவதில் எந்த பிரச்சனையும் இல்லை. எங்களது சகோதரர்களுகிடையே உள்ள பிரச்சனை காரணமாக தான் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி நீர்ப்பாசனம் இல்லாத வழியை அவருக்கு விற்றுவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

6. 1ம் பிரதிவாதி பிளாட் போடுவதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தெரிவித்தது தான் எனக்கு தெரியாது.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN
Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN

Principal District Munsif,
Kancheepuram.